பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 29 சனிக்கிழமை 14.08.2021 கதிர் 148

## வவுனியாவில் மேலும் 76 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 76 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய சமயபுரம் பகுதியில் இருவருக்கும், மூன்றுமுறிப்பு இராணுவ

☞2

# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல்; தடைகளைத் தாண்டி சுடரேற்றினார் சிவாஜி

### பொலிஸ், இராணுவத்தின் குழப்பல் நடவடிக்கை முறியடிப்பு








(எஸ்.நிதர்ஷன்)

**செஞ்சோலைப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு படுகொலையானவர்களுக்கு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.**

**அவர் வல்வெட்டித்துறையிலுள்ள தனது அலுவலகத்தின் முன்பாக இன்று காலை சுடரேற்றி, மலர் தூபி அஞ்சலி செலுத்தினார்.**

☞2

### வல்வெட்டித்துறையில் 5 கோடி ரூபா பெறுமதியான

## ஐஸ், கேரள கஞ்சாவுடன் மூவர் வசமாக சிக்கினர்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் 5 கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மற்றும் ஐஸ் ரக போதைப்பொருளுடன் 3 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கடற்பகுதியில் இன்று அதிகாலை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 126 கிலோ கிராம் கேரள கஞ்சாவும், 2 கிலோ 330 கிராம் அளவிலான ஐஸ் ரக போதைப்பொருளும்

☞2

## கைதுசெய்யப்பட்ட மூவரில் ஒருவருக்குக் கொரோனா!

(எஸ்.நிதர்ஷன்)

ஐஸ் மற்றும் கேரள கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவரிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால் அவரை நீதிமன்றத்தின் உத்தரவில் சிறைச்சாலை ஊடாக இடைத்தங்கல் முகாமில் சேர்க்கவும், ஏனைய இருவரையும் தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று அதிகாலை 5.30 மணியளவில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவு கடற்கரையில் கடற்படையினர் முன்னெடுத்த ரோந்து நடவடிக்கையின்போது, வாகனம் ஒன்றில் ஏற்றி கடத்த முற்பட்ட ஐஸ், கஞ்சா என்பன

☞2

## பருத்தித்துறையில் இன்று 5 பேருக்குக் கொரோனா!

யாழ்., பருத்தித்துறை - பழவத்தைப் பகுதியில் இன்று 5 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவு தகவல்கள் தெரிவித்தன.

குறித்த கிராமத்தில் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று அறிகுறிகளுடன் சிலர் காணப்பட்ட நிலையில் கிராம மக்கள் சுகாதாரப் பிரிவுக்குத் தகவல்

☞2

## நாடாளுமன்ற பொலிஸ் அதிகாரிகள் 10 பேருக்குக் கொரோனாத் தொற்று

இம்மாதம் 2ஆம் திகதி தொடக்கம் இன்று வரை நாடாளுமன்ற பொலிஸ் அதிகாரிகள் 10 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே தொற்று உறுதியாகியுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்றப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'உயிர் குமிழி' முறை மூலம் நாடாளுமன்ற பொலிஸாரைப் பணிக்கு அமர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது விடுமுறையில் உள்ள பொலிஸாருக்கு விரைவான அன்டிஜன் பரிசோதனைகளை

☞2

## தென்மராட்சியில் இன்று 18 பேருக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)


யாழ்., தென்மராட்சி - சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று 18 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று 68 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையின்போது 18 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இன்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில், சாவகச்சேரி தனியார் நிறுவன ஊழியர், கொடிகாமம் மீன் சந்தை வியாபாரி,

☞2

## வல்லிபுர ஆழ்வார் மகோற்சவம் மாசி மாதத்துக்கு ஒத்திவைப்பு



வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் , ஆலய தர்மகர்த்தா சபை மகோற்சவத்தை எதிர்வரும் மாசி மாதத்துக்கு ஒத்திவைத்துள்ளது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் இடம்பெற்றது.

☞2

## சுகாதாரக் கட்டுப்பாடுகளைச் சட்டமாக்கும் வர்த்தமானி அறிவிப்பு திங்கள் வெளியீடு

### அமைச்சர் பவித்ரா தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 14

கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக மேல் மாகாணத்தில் தற்போதுள்ள கட்டுப்பாடுகளைக் கடுமையாக்க மற்றொரு சுகாதாரக் கட்டுப்பாடுகளின் சுற்றறிக்கையை வெளியிட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இதுவரை வெளியிடப்பட்ட சுகாதாரக் கட்டுப்பாடுகளின் சுற்றறிக்கைகளைச் சட்டமாக்கும் வர்த்தமானி அறிவிப்பு எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்)

## தென்மராட்சியில் இன்று ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளிமாவட்டங்களில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள், இலங்கை போக்குவரத்துச் சாலை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் என 18 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, தென்மராட்சி பிரதேசத்துக்குட்பட்ட கொடிகாமம், சாவகச்சேரி, வரணி, எழுதுமட்டுவாழ் பகுதிகளில் கொரோனா அபாய நிலை அதிகரித்துள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ள சுகாதாரத் தரப்பினர், பொதுமக்களை மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கொரோனாத் தொற்று மற்றும் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் தேவையற்ற நடமாட்டங்களை தவிர்ப்பதுடன், அத்தியாவசியமான பயணங்களின்போது சுகாதார வழிகாட்டல் அறிவுறுத்தல்களை மிகவும் இறுக்கமாகப் பேணுமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## நாடாளுமன்ற ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொள்ளவும், குறித்த பரிசோதனை முடிவுகளுக்கு அமைவாக அவர்களைப் பணிக்கு அமர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## வல்லிபுர ஆழ்வார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த கூட்டத்தின் முடிவில் இவ்வருடம் மகோற்சவம் நடத்துவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆலய தர்ம கர்த்தா சபையினர், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் திருவிழா உபயகாரர்களுடன் ஆலய வளாகத்தில் இன்று கலந்துரையாடலை நடத்தினர்.

இந்தக் கலந்துரையாடலின் முடிவில், ஆலய மகோற்சவத்தை அடுத்த வருடம் மாசி மாதம் வரும் பூரணை மகம் நாளுக்கு ஒத்திவைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## செஞ்சோலைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த அஞ்சலிக்குப் பொலிஸார், இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்திய போதிலும், அவற்றையும் மீறி படுகொலையானவர்களுக்கு அவர் அஞ்சலி செலுத்தினார்.

புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் பகுதியிலிருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது கடந்த 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14ஆம் திகதி விமானப் படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். 150 இற்கும் மேற்பட்ட மாணவிகள் படுகாயமடைந்திருந்தனர்.

## வவுனியாவில் மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முகாமில் ஒருவருக்கும், ஈரப்பெரியகுளம் பகுதியில் ஒருவருக்கும், தேக்கவத்தைப் பகுதியில் இருவருக்கும், வீரபுரம் பகுதியில் ஒருவருக்கும், சின்னசிப்பிக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், ஓமந்தைப் பகுதியில் 14 பேருக்கும், நெடுங்கேணி பகுதியில் இருவருக்கும், அரசடிக்குளம் பகுதியில் இருவருக்கும், நெடுங்குளம் பகுதியில் ஒருவருக்கும், பூந்தோட்டம் பகுதியில் மூன்று பேருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், பாரதிபுரம் பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, சிறிராமபுரம் பகுதியில் ஒருவருக்கும், ரயில் திணைக்கள விடுதியில் ஒருவருக்கும், நேரியகுளம் பகுதியில் 12 பேருக்கும், தோணிக்கல் பகுதியில் நான்கு பேருக்கும், கூமாங்குளம் பகுதியில் இருவருக்கும், சண்முகபுரம் பகுதியில் ஒருவருக்கும், செக்கட்டிப்புலவு பகுதியில் ஒருவருக்கும், சூசைப்பிள்ளையார்குளம் பகுதியில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், இராசேந்திரங்குளம் பகுதியில் ஒருவருக்கும், சோயாலேன் பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், கோவில்புதுக்குளம் பகுதியில் மூன்று பேருக்கும், பண்டாரிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், தந்திரிமலை பகுதியில் ஒருவருக்கும், அம்பலாங்கொட பகுதியில் ஒருவருக்கும், தரணிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், முதலியார்குளம் பகுதியில் ஒருவருக்கும், தம்பனைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாசிலாம்பலாங்கொட பகுதியில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## பருத்தித்துறையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்கியிருந்தனர். இதனடிப்படையில் இன்று காலை சுகாதாரப் பிரிவினர் அன்டிஜன் பரிசோதனை நடத்தியிருந்தனர்.

இதன்போது 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்தன.

## கைதுசெய்யப்பட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைப்பற்றப்பட்டன. அவற்றைக் கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் மாங்குளம், கிளிநொச்சி, இரணைமடுப் பகுதியைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றபோது முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஐஸ், கேரள.......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் மாங்குளம், இரணைமடு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த 38, 34 மற்றும் 28 வயதுகளையுடைவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## பரிந்துரை சபை ஏறுமா?

கொவிட் பேரிடரினால் சிக்குண்டு பேரழிவைச் சந்தித்து நிற்கும் நாட்டு மக்களின் உயிரைப் பாதுகாப்பதே இன்றைய பிரதான பொறுப்பாகும். பொருளாதாரம் பற்றி பின்னர் கவனம் செலுத்தலாம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா தெரிவித்திருக்கிறார்.

இதே கருத்தை ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமானரணில்விக்கிரமசிங்கவும்நாடாளுமன்றத்தில்தெரிவித்திருந்தார்.

“நாட்டின் உண்மையான நிலைவரத்தை அரசாங்கம் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். போலியான தரவுகளை மக்கள் முன் வைப்பதை அரசு நிறுத்த வேண்டும். நாட்டில் மிக மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. மக்களை வாழ வைக்கத் தேவையானது பொருளாதாரமா அல்லது உடனடி ஒட்சிசனா என்பதை அரசு முடிவு செய்ய வேண்டும். நாட்டை முடக்குவதைத் தவிர வேறு வழியில்லை. நாட்டை மூடி தொற்றுப் பரவுவதை முதலில் கட்டுப்படுத்துங்கள். மக்களை ஆபத்திலிருந்து பாதுகாப்பதுதான் அனைவரினதும் முதல் கடமை. பொறுப்பு. பின்னர் பொருளாதாரத்தைக் கருத்தில் கொள்ளலாம். இந்த நெருக்கடியான சமயத்தில் எரிவாயுவின் விலையை அதிகரித்து மக்களின் வாழ்க்கைச் சுமையை உயர்த்தி இருக்கும் அரசின் மனிதாபிமானமற்ற போக்கு கண்டனத்துக்குரியது.” – என்று தெரிவித்திருக்கிறார் சஜித் பிரேமதாஸா.

ஆனால் இந்த கோரிக்கைகள் சபை ஏறுமா, கோட்டா அரசின் காதில் வீழுமா, அரசு கவனிக்குமா என்பவை எல்லாம் சந்தேகத்துக்குரியவையே.

வீரியமும் பரவல் வேகமும் கொண்ட கொரோனா டெல்டா வைரஸ் காரணமாக மணித்தியாலத்திற்கு ஐந்து மனித உயிர்கள் பலியாகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே நாட்டை முடக்குவதை மேலும் தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் பேரவையின் செயலாளர் வைத்தியர் கமல் ஏ.பெரேரா தெரிவித்திருக்கிறார்.

“நாட்டை முடக்கி, டெல்டா வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காது போனால் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரையிலான ஐந்து மாத காலப்பகுதியில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனா மரணங்கள் பதிவாகும். உடனடியாக 4 வாரங்கள் பயணக் கட்டுப்பாடுகளை விதித்து மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தினால் இந்த ஐந்து மாத காலத்தில் கொவிட் மரணங்களை 18 ஆயிரத்துக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும்.” – உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து இலங்கையின் வைத்திய, சுகாதார நிபுணர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகள் தொடர்பில் இலங்கையைச் சேர்ந்த 30 வைத்திய சுகாதார நிபுணர்களின் ஆலோசனையுடன் உலக சுகாதார ஸ்தாபனம் இந்த அறிக்கையை விடுத்துள்ளது.

நாட்டை முடக்காவிட்டால் ஒக்டோபர் முதல் வாரத்தில் நாளாந்த மரணங்கள் 220 ஆக உயர்வடைந்து இருக்குமென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் நீலிக மலவிகே சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தினசரி கொவிட் காவு எண்ணிக்கை ஏற்கனவே 150 ஆக உயர்ந்துவிட்டது. தினசரி குறைந்தபட்சம் 3 ஆயிரம் பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். இதனைவிட மேலும் ஒரிரு மடங்கினர் அடையாளம் காணப்படாமல் சமூகத்தில் திறந்து விடப்படுகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் நாடு முடக்கப்படாமல் இருந்தால் பேராபத்து நிகழும். குறைந்தது நான்கு வார காலத்திற்கு நாட்டை முழுமையாக முடக்கி, மக்கள் நடமாட்டத்தையும் போக்குவரத்தையும் தடுத்து நிறுத்தி, அசைவியக்கத்தை கட்டுப்படுத்தினால் கொரோனா தாக்கத்தின் வீச்சையும் பாதிப்பையும் ஓரளவு தணித்துக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் எனக் கூறப்படுகின்றது இந்த விடயங்கள் அடங்கிய உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரை அறிக்கை நேற்று முன்தினம் சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அது நேற்று சுகாதார அமைச்சரினால் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆனால் இந்த விடயத்தில் எந்த நிபுணத்துவ அறிக்கையையும் – பரிந்துரையையும் – ஆட்சி தரப்பினர் காதுகளில் ஏறப்போவதில்லை. அது விட்டேத்தியாக கவனிக்கப்படாமல் இருக்கும் என்பது திண்ணம். அதுதான் இந்த அரசின் போக்கு.

# பத்திரிகையாளர் சிவராஜாவை பின்தொடரும் நபர்கள் யாவர்?

## பொலிஸ்மா அதிபரிடம் சுதந்திர ஊடக இயக்கம் கேள்வி புலன் விசாரணை செய்து அறிக்கையிடுமாறும் கோரிக்கை

தமிழன் எனும் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஆர். சிவராஜாவின் கல்கிசை வீட்டுத் தொகுதிக்கு கடந்த 12 ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு ‘குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து’ என தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு சந்தேகத்துக்கிடமான இருவர் வந்துள்ளனர். அவர்கள் யார் எதற்காக வந்தார்கள்? அவரது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதா? இவர்கள் தொடர்பில் புலன்விசாரணை செய்து அறிக்கையிடவேண்டும்.

- இவ்வாறு சுதந்திர ஊடக இயக்கம் பொலிஸ்மா அதிபர் சந்தன ஏக்கநாயக்கவைக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழன் எனும் தமிழ் மொழி மூல பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஆர். சிவராஜா வசித்து வரும் கல்கிசை பிரதேசத்தில் உள்ள தனியார் வீட்டுத் தொகுதிக்கு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அதிகாலை 2.30 மணிக்கு ‘குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இருந்து’ என தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு சந்தேகத்துக்கிடமான இருவர் வந்துள்ளனர் என அவர் உங்களுக்கு முறைப்பாடொன்றை முன் வைத்துள்ளார்.

வீட்டுத் தொகுதியின் நுழைவாயிலைத் திறந்து, தமக்கு பிரதம ஆசிரியர் வசிக்கும் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்குமாறு குறித்த சந்தேகத்திற்கிடமானவர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டாலும், பாதுகாப்பு உத்தியோகத்தர் அதனை மறுத்துள்ளார் என சிவராஜா எமக்குத் தெரிவித்தார்.

இந்த சந்தேகத்துக்கிடமானவர்கள் யார், இவர்கள் ஏன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரை அவ்வாறான அதிகாலை வேளையில் சந்திக்க முயற்சி செய்தார்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக புலனாய்வு செய்து, விடயங்களைவெளிப்படுத்தி, உரியவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அத்தோடு, பத்திரிகை ஆசிரியருக்கு உயிர் அச்சுறுத்தல்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவந்தால், உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக் கொள்கிறது. - என்றுள்ளது.



## செஞ்சோலை படுகொலை 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் படுகொலை நடந்த இடத்தில் அஞ்சலி செலுத்தத் தடை

செஞ்சோலை படுகொலை தினத்தின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் தினம் இன்றாகும். எனினும் படுகொலை நடந்த இடத்தில் இறந்த பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்த, பெற்றோருக்கு இராணுவத்தினரும் பொலி ஸாரும் தடை விதித்துள்ளனர்.

மேலும் முல்லைத்தீவு-வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை பகுதியில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வுத்துறையினர் உள்ளிட்ட பலரும் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் இன்று (சனிக்கிழமை) காலை, உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர் சிலர், அங்கு வருகை தந்திருந்த போதிலும், பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த வளாகத்திற்குள் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

குறித்த சம்பவம் தொடர்பாக உயிரிழந்த மாணவிகளின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளதாவது, ‘எங்களது பிள்ளைகள் உயிரிழந்த இடத்தில் தனித்தனியாகச் சென்று கூட அஞ்சலி செலுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமை எதிர்வரும் காலங்களில் இருக்கக் கூடாது. அடுத்த வருடமாவது, எங்களது பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்’ என அவர்கள் தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி, முல்லைத்தீவு- வள்ளிபுனம் பகுதியிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது விமானப் படை நடத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61பேர் கொல்லப்பட்டனர். 129 இற்கும் அதிகமான மாணவிகள் அவயவங்களை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

## 100 மெட்ரிக் தொன் ஒட்சிசனை கொள்வனவு செய்யத் தீர்மானம்

இந்தியாவில் இருந்து 100 தொன் ஒட்சிசனை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவை அனைத்தும் கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களுக்காக கொள்வனவு செய்யப்படுகின்றன என அவர் கூறினார்.

தேவையேற்படின் கொள்வனவு செய்யப்படும் அளவு மேலும் அதிகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பிற்கு பயணிக்கும் வீதி தற்காலிகமாக மூடல்

*களனி பாலத்தின் கட்டுமானப் பணி காரணமாக அதனூடாக கொழும்பிற்கு பயணிக்கும் வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.*

*பேஸ்லைன் வீதியின் களனிதிஸ்ஸ சுற்றுவட்டத்தில் இருந்து ஒரு கொடவத்த சந்தி வரையான கொழும்பிற்குள் நுழையும் வீதி இவ்வாறு மூடப்பட்டுள்ளது.*

*இன்று (சனிக்கிழமை) அதிகாலை 5 மணி முதல் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரையில் குறித்த வீதி மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

# பெண்களின் உரிமைகளில் கடும் கட்டுப்பாடுகள் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் விதிக்கின்றனர்

ஐ.நா. தலைவர் தெரிவிப்பு



ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான்கள், அந்நாட்டின் பல முக்கிய நகரங்களை கைப்பற்றி வேகமாக முன்னேறி வருகின்றனர். ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலை கைப்பற்றும் முனைப்பில் அந்நகரை நெருங்கிவிட்டதாக கூறப்படுகிறது. இதனால், 2001ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆப்கானிஸ்தான் மீண்டும் தலிபான்கள் கட்டுக்குள் வர வாய்ப்புள்ளது.

இந்த சூழலில், தலிபான்களால் கைப்பற்றப்பட்ட மாகாணங்களில் பெண்களின் உரிமைகளில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்செயலாளர் அண்டனியோ குட்டரொஸ் வேதனை தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட ஐ.நா. பொதுச்செயலாளர் அண்டனியோ குட்டரொஸ் கூறுகையில், தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மனித உரிமைகள் மீது கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன எனத் தெரியவருகிறது. குறிப்பாக பெண்களையும் பத்திரிகையாளர்களையும் குறிவைத்து அவர்களின் உரிமைகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என வரும் தகவல் வேதனை அளிக்கிறது என்றார்.

# சீனாவில் கனமழை!
## வெள்ளத்துக்கு 21 பேர் சாவு



பருவநிலை மாற்றம் காரணமாக புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்கள் அடிக்கடி நடக்கின்றன. கடந்த மாத இறுதியில் சீனாவின் மத்திய மாகாணம் ஹெனானில் உள்ள ஷெங்ஜோ நகரில் 1,000 ஆண்டுகளில் இல்லாத வகையில் கன மழை கொட்டி தீர்த்தது.

இதனால் அந்த நகரமே மொத்தமாக வெள்ளத்தில் மூழ்கியது. இதில் 150இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இந்த நிலையில் சீனாவின் மத்திய மாகாணமான ஹூபெயில் உள்ள லியுலின் கடந்த இரு தினங்களாக கனமழை பெய்தது. கடந்த புதன்கிழமை இரவு 9 மணி தொடங்கி வியாழக்கிழமை காலை 9 மணி வரையிலான நேரத்தில் மட்டும் 503 மி.மீ. மழை கொட்டியதாக அந்த நாட்டின் வானிலை ஆய்வுமையம் தெரிவித்தது மழையை தொடர்ந்து அந்த நகரில் உள்ள நீர்நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஊருக்குள் தண்ணீர் புகுந்தது.

இதனால் சாலைகளில் வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்து ஓடுகிறது. 100இற்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. இதனிடையே மழை, வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் 21 பேர் உயிரிழந்தனர் எனவும், 4 பேர் மாயமானார்கள் எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் மழை, வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புக் குழுவினர் குவிக்கப்பட்டு முழு வீச்சில் மீட்பு பணிகள் நடந்து வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு 3ஆவது டோஸ் தடுப்பூசி போட அமெரிக்கா அனுமதி

அமெரிக்காவில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்துள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு தீவிர கொரோனாத் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது.

இதை கருத்தில்கொண்டு, அத்தகைய நபர்களுக்கு பைஸர் அல்லது மாடர்னா தடுப்பூசிகளில் 3ஆவது டோஸ் போட அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அவசர அனுமதி அளித்துள்ளது. அதன்மூலம் அவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு கிடைக்கும் என்று கருதப்படுகிறது. மற்றவர்களுக்கு 2 டோஸ்களிலேயே போதிய பாதுகாப்பு கிடைப்பதால், இன்னொரு டோஸ் தேவையில்லை என்று அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் ஆணையர் (பொறுப்பு) ஜேட் உட்காக் தெரிவித்தார்.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

INDIVIDUAL ENGLISH CLASSES
K. GANESH (BA. Pera)
இலகுவாக கதைக்கும் ஆங்கில வசன அமைப்பு முறை. Tenses, Active and Passive, Direct and Reported Speech
Grade 7 - GCE O/L - A/L
பட்டதாரிகள், தொழில் செய்வோர் அனைவரும்



077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்

வல்வெட்டித்துறை நகர பிதாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.03.1945
அமரர்
மறைவு 11.08.2021

கோணலிங்கம் கருணானந்தராசா
(வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர்)
(தலைமைக் குழு உறுப்பினர் , தமிழ்த் தேசியக் கட்சி)
(முன்னாள் மத்திய குழு உறுப்பினர் , தமிழ் ஈழ விடுதலை இயக்கம் - ரெலோ)
அன்னாரின் பிரிவினால் துயருற்று இருக்கும் தாய்,மனைவி,சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள் , மைத்துனிகள்,பெறாமக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,உறவினர்கள்,
நண்பர்கள் ,தமிழ்தேசிய உனர்வாளர்கள் , வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள்,செயலாளர் உட்பட
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,பொதுமக்கள்
அனைவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

தமிழ்த் தேசியக் கட்சி (தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி)

மதுரை ஆதீனம்

# அருணகிரிநாத சுவாமிகள் நேற்றிரவு சமாதியடைந்தார்



மதுரை ஆதீனத்தின் 292 ஆவது குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தமது 77 ஆவது வயதில் நேற்றிரவு சமாதியடைந்தார். சுவாமிகளின் பூதவுடல் மதுரை முனிச்சாலை அருகில் மதுரை ஆதீனத்திற்குச் சொந்தமான இடத்தில் இன்று பிற்பகல் அடக்கம் செய்யப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ அருணகிரி நாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் திடீர் உடல்நலக்குறைவு காரணமாக கடந்த 9 ஆம் திகதி மதுரையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த நிலையில், அவர் நேற்றிரவு உயிரிழந்தார்.

மதுரை ஆதீன மடத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட பூதவுடலுக்கு, கோவை காமாட்சிபுர ஆதீனம் மற்றும் திருவாவடுதுறை ஆதீனம், இளைய மதுரை ஆதீனம் ஆகியன அஞ்சலி செலுத்தின. இதனையடுத்து, சுவாமிகளின் மடத்தின் உட்புறத்தில், உடலானது சித்ராசனத்தில் அமர்ந்த நிலையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர், பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, முனிச்சாலை பகுதியில் உள்ள மதுரை ஆதீனத்திற்கு சொந்தமான இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

திருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப்பட்ட தமிழகத்தின் மிகத் தொன்மையான சைவ திருமடங்களில் ஒன்றாக மதுரை ஆதீனம் திகழ்கின்றது. இதன் 292 ஆவது குருமகா சந்நிதானமாக 1975 மே மாதம் 27 ஆம் திகதி ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு பட்டம் சூட்டப்பட்டமையுடன், 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி சுவாமிகள் இந்த பட்டத்தினை ஏற்றார்.

மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் சுவாமிகளின் மறைவுக்கு தமிழக அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மதுரை ஆதீனத்தின் 293 ஆவது குருமகா சந்நிதானமாக ஹரி ஹர சுவாமிகள் அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் இன்னும் 10 நாட்களில் முறைப்படி பொறுப்பேற்பார் என ஆதீன மட நிர்வாகிகள் அறிவித்துள்ளனர் என தமிழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ராகுல் காந்தியின் இன்ஸ்டாகிராம் பதிவு

## பேஸ்புக் அதிகாரிகளுக்கு அழைப்பாணை




டெல்லியில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான சிறுமியின் பெற்றோர் குறித்த விவரங்களை வெளியிட்டதற்காக, ராகுல் காந்தியின் டுவிட்டர் பக்கம் முடக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு வாரங்கள் கழித்து இன்றுதான் அவரது டுவிட்டர் கணக்கு மீண்டும் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

இதற்கிடையில், ராகுல் காந்தியின் இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் சிறுமியின் பெற்றோர் குறித்த விவரங்கள் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளன எனத் தெரிகிறது. எனவே, ராகுல் காந்தியின் பதிவுகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி, இன்ஸ்டாகிராம் நிறுவனத்தை நடத்தும் பேஸ்புக்குக்கு இந்திய தேசியக் குழந்தைகள் நல ஆணையம் கடிதம் எழுதியிருந்தது. அதற்கு பேஸ்புக் நிறுவனத்திடம் இருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை.

இதையடுத்து, பேஸ்புக் நிறுவன இந்திய அதிகாரிகளுக்கு இந்திய தேசியக் குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. அந்த அழைப்பாணையில், வரும் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு டெல்லி ஜன்பத் சாலையில் உள்ள இந்திய தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணைய அலுவலகத்துக்கு பேஸ்புக் இந்தியா சார்பில் பிரதிநிதிகள் நேரிலோ அல்லது காணொலி மூலமோ ஆஜராகி, ராகுல் காந்தியின் இன்ஸ்டாகிராம் கணக்கு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விளக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேகதாது அணைக்கு தமிழக அரசிடமிருந்து அனுமதி தேவையில்லை; கர்நாடக முதல்வர்



மேகதாது அணைத் திட்டத்துக்கு தமிழக அரசின் அனுமதி தேவையில்லை என்று கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மை தெரிவித்தார்.

பெங்களூர், கிருஷ்ணா அரசு இல்லத்தில் மாநிலத்தின் நீர்ப்பாசனத் திட்டங்கள் குறித்து ஆய்வு நடத்திய பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மாநில முதல்வர் பசவராஜ் பொம்மை, கர்நாடகத்தில் செயல்படுத்தப்படும் நீர்ப்பாசனத் திட்டங்களை உரிய காலக்கெடுவுக்குள் முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். அனுமதி அளிக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளேன். நீர்மேலாண்மையில் கவனம் செலுத்தி, அதிக நீரை பாசனத்துக்குக் கொண்டுவர அறிவுறுத்தியுள்ளேன் என்று தெரிவித்தார்.

மேகதாது அணைத் திட்டத்துக்கு தமிழக அரசின் அனுமதி தேவை என்று, மத்திய நீர்வளத் துறை அமைச்சர் கஜேந்திரசிங் கொவத் கூறியிருக்கின்றமை குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, ஆந்திர மாநிலம் தொடுத்த வழக்கு ஒன்றில் குடிநீர்த் திட்டங்களுக்கு கீழ்ப்படுகை மாநிலங்களின் ஒப்புதல் தேவையில்லை என உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு உள்ளது. மேகதாது அணைத் திட்டமும் குடிநீர்த் திட்டமாக இருப்பதால், அதைச் செயல்படுத்த தமிழகத்தின் அனுமதி தேவையில்லை.

இது குறித்து மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திரசிங் கொவத்தின் கவனத்துக்கும் கொண்டு சென்றேன். அப்போது, அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர் என்னிடம் தெரிவித்தார். அதன்படி, டெல்லி சென்று அவரிடம் ஆவணங்களை வழங்கி விளக்கம் அளிப்பேன். மேகதாது அணைத் திட்டத்துக்கு எதிராக தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது. அந்த வழக்கையும் கர்நாடகம் எதிர்கொள்ளும் என்று பதிலளித்தார்.

# குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும்!

## தமிழிசை அறிவுறுத்தல்

கொரோனாவின் மூன்றாவது அலை ஏற்படுவதற்கு முன்னர், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என புதுச்சேரி மாநிலத்தின் துணை நிலை ஆளுநரும் மருத்துவருமான தமிழிசை சவுந்தரராஜன் அறிவுறுத்தியுள்ளார்.

டெல்லியில் பிரதமர் மோடியைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குப் பேட்டியளித்த அவர், கொரோனாவின் மூன்றாவது அலை வந்தாலும் வராவிட்டாலும் அனைவரும் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

இப்போதும் கூட தடுப்பூசி செலுத்திக் கொள்ள பலர் தயக்கம் காட்டுவதாகவும், தடுப்பூசி ஒன்றே நிரந்தரத் தீர்வு எனவும் டாக்டர் தமிழிசை சவுந்திரராஜன் அறிவுறுத்தியுள்ளார்.

# மூக்கு வழியே கொரோனாத் தடுப்பு மருந்து; அடுத்த கட்ட சோதனைகளை நடத்த அனுமதி

மூக்கு வழியே செலுத்தக்கூடிய கொரோனாத் தடுப்பு சொட்டு மருந்தின் மீது மூன்றாவது நான்காவது கட்டச் சோதனைகளை மேற்கொள்ள பாரத் பயோடெக் நிறுவனத்திற்கு இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு ஆணையம் அனுமதி அளித்துள்ளது. இந்தியாவில் மூக்கு வழியிலான கொரோனாச் சொட்டு மருந்து சோதிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். பாரத் பயோடெக் நிறுவனத்தின் முதல் கட்ட சோதனையில் 18 முதல் 60 வயதுக்குட்பட்டோருக்கு கொடுத்து சோதனை நடத்தப்பட்டதாகவும் அதில் மருந்து பாதுகாப்பானது என்பது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் இந்திய மத்திய அரசின் உயிரித் தொழிநுட்பத்துறை தெரிவித்துள்ளது. கொரோனாத் தடுப்பூசியை பெண்களுக்கு செலுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில அரசுகளுக்கு இந்தியத் தேசிய பெண்கள் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. பெண்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்வது குறைவாக உள்ளது என ஊடகங்களில் வெளியான தகவல்களின் அடிப்படையில் இந்த அறிவுறுத்தல் வெளியாகியுள்ளது.




# ஆபரண விளம்பரங்கள் வரதட்சணையை ஊக்குவிக்கின்றன; கேரள ஆளுநர் கருத்து

தங்க ஆபரணங்களை திருமணத்தோடும் மணமகளோடும் இணைத்து விளம்பரப் படங்கள் தயாரிப்பதை நகைக் கடை உரிமையாளர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என கேரள ஆளுநர் ஆரிஃப் முகமது கான் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருமணம் மற்றும் மணமகளோடு ஒப்பிட்டு எடுக்கப்படும் விளம்பரங்கள், வரதட்சணையை ஊக்குவிப்பதாக அமைகின்றன என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

எனவே, மணமகள்களுக்கு பதிலாக இல்லத்தரசிகள் அல்லது குழந்தைகளை வைத்து தங்க ஆபரணங்களுக்கான விளம்பரப்படங்களை தயாரிக்கலாம் என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.



# மட்டக்களப்பில் வீதிகள் புனரமைப்பு



மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழுத் தலைவருமான அல்ஹாபில் நசீர் அஹமட்டின் முயற்சியின் பலனாக கிராமிய வீதி அபிவிருத்தி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின்நிதிஒதுக்கீட்டில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவில் மூன்று வீதிகளின் வேலைகள் வியாழக்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் வாழைச்சேனை செம்மண்ணோடை ஹாஜியார் வீதி இரண்டு கோடியே முப்பத்தெட்டு லட்சம் நிதி ஒதுக்கீட்டிலும், வாழைச்சேனை பிறைந்துறைச்சேனை அஸ்கர் பாடசாலை வீதி அறுபத்தாறு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், வாழைச்சேனை மீன்பிடி சங்க வீதி இருபத்தெட்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டிலுமாக மூன்று வீதிகள் காபட் வீதிகளாக புனரமைப்பு செய்வதற்கான வேலைத் திட்டங்களை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான அல்ஹாபில் நசீர் அஹமட் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர்களான எம்.அன்வர், ஏ.எல்.எ.கபூர், எஸ்.ஐ.எம். இம்தியாஸ், எம்.அஸ்மி, எம்.தையூப், ஏறாவூர் நகரசபை முன்னாள் தவிசாளர் எம்.ஐ.தஸ்லிம் மற்றும் ஊர் பிரமுகர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியஸ்தகர்களும் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் உட்பட ஐவருக்கு கொரோனா

மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் உட்பட மேலும் ஐவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையில் கடந்த மூன்று தினங்களாக நோயாளர்கள், இனங்காணப்பட்டுவரும் நிலையில் மாநகரசபை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் உட்பட மாநகரசபையில் கடமையாற்றும் 5 பேர் கொரோனா நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் மாநகரசபையின் பிரதி ஆணையாளர் உட்பட 8 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்த நிலையில் நேற்று கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளதாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு ஆற்றில் குதித்த இளைஞன் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேசத்திலுள்ள பெண்டுகள்சேனை ஆற்றில் குதித்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ள பரிதாபச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண்டுகள்சேனை, பூலாக்காடு வயல் பகுதியில் மண் ஏற்றச் சென்றபோது வயல் பகுதியில் நின்றோர் மண் ஏற்றியவர்களை துரத்தியுள்ளனர் இதனால் குறித்த இளைஞன் ஓடிச் சென்று அருகிலுள்ள ஆழமான ஆற்றில் குதித்துள்ளார்.

ஆற்றில் குதித்தவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவருகின்றது.

உயிரிழந்தவர் கிரான் பகுதியைச்சேர்ந்த 29 வயதுடைய குலேந்திரன் இந்திரன் எனவும் தெரியவருகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





## மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சர் மட்டக்களப்புக்கு நகருக்கு விஜயம்

மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள நீரியல்சார் வளங்களை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை முன்னெடுத்தல், புதிய துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள் போன்றவற்றினை அமைத்தல் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார நிலைமையையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துதல் என்பன தொடர்பாக மாவட்டத்தின் பல பகுதிகளாகிய வாகரை, பனிச்சங்கேணி, கொக்கட்டிச்சோலை, கிரான்குளம் உள்ளிட்ட இடங்களுக்கான கள விஜயங்களை நேற்று மேற்கொண்டு பார்வையிட்டுள்ளார் .

இதன்போது ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படும் நீர் வளங்கள் தொடர்பாக ஆராயப்பட்டமையுடன் அவற்றை பயன்படுத்தி எவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதாரத்தில் மேம்பட்ட சமூகமாக மாற்றுவது என்பது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## போதைப்பொருள் வியாபாரி உள்ளிட்ட இருவர் கைது

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான் பிரதேசத்தில் வைத்து போதைப்பொருள் சில்லறை வியாபாரியொருவர் உட்பட இருவர் 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் ஏறாவூர், மீராக்கேணி பிரதேசத்தைச்சேர்ந்த 19 மற்றும் 21 வயதுடைய இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட பரிசோதனையின் போதே இவர்கள் இருவரும் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மிக நீண்ட நாள்களாக ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசங்களில் போதைப்பொருள் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளமையுடன், நேற்றும் வியாபார நோக்கில் போதைப்பொருளை வாழைச்சேனைப் பிரதேசத்துக்கு கடத்தி வந்துள்ளமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்தோடு, போதைப்பொருளை கடத்தி வருவதற்காக பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## மட்டு . களுவாஞ்சிகுடி பகுதியில் கைக்குண்டுடன் இளைஞன் கைது

மட்டக்களப்பு–களுவாஞ்சிகுடி பகுதியில் நேற்று கைக்குண்டுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


விநாயகபுரம் அம்பாறையைச் சேர்ந்த விஜயராசா பிரசாந்தன் எனும் 34 வயது மதிக்கதக்க இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார் .

அம்பாறையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வரும் போதே நேற்று காலை 10.30 மணியளவில் விசேட அதிரடிப் படையினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது கைகுண்டுமீட்கப்பட்டது .

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 1 கைக்குண்டும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டமையுடன், மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொள்ளுகின்றனர்.



# பாகிஸ்தானுடனான முதல் டெஸ்ட் போட்டி மே.இ.தீவுகள் 34 ஓட்டங்கள் முன்னிலை



மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம்நாள் ஆட்ட நிறைவில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களைவிட மேற்கிந்தியத் தீவுகள் அணி 34 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

ஜமைக்காவில் நேற்று முன் தினம் ஆரம்பமான இந்தப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பாகிஸ்தான் அணி 217 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பஃவாட் அலம் 56 ஓட்டங்களையும் பஃஹீம் அஷ்ரப் 44 ஓட்டங்களையும் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஜெய்டன் சீல்ஸ், ஹோல்டர் இருவரும் தலா 3 விக்கெட்டுகளையும் கெமர் ரோச் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. கிரெய்க் பிரத்வைட் 97 ஓட்டங்களையும் ஜேஸன் ஹோல்டர் 58 ஓட்டங்களையும் பெற்றனர். நேற்றைய ஆட்ட நேர முடிவில் ஜோசுவா ட சில்வா 20 ஓட்டங்களுடனும் ஜோமேல் வரிகன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

பாகிஸ்தான் அணியின் மொஹமட் அப்பாஸ் 3 விக்கெட்டுகளையும், ஷாயின் அப்ரிடி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டம் தொடரவுள்ளது.

## இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டி நிதானமாகத் துடுப்பெடுத்தாடும் இங்கிலாந்து

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி, நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 119 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஜோ ரூட் 48 ஓட்டங்களுடனும் ஜொனி பெயர்ஸ்டொ 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில்



வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 364 ஓட்டங்களைக் குவித்தது. கே.எல். ராகுல் 129 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 83 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அன்டர்சன் 5 விக்கெட்டுகளையும் ஒலலி ரொபின்சன் மற்றும் மார்க் வுட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி இன்று ஆட்டம் ஆரம்பித்த நேரத்திலிருந்து நிதானமாக முன்னேறிவருகிறது. இங்கிலாந்து அணி 190 ஓட்டங்களை எடுத்திருந்தபோது அணித்தலைவர் ஜோ ரூட்78 ஓட்டங்களுடனும் ஜொனி பெயர்ஸ்டொ 41 ஓட்டங்களுடனும் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில் மொஹமட் சிராஜ் 2 விக்கெட்டுகளையும் மொஹமட் ஷமி 1 விக்கெட்டினையும் வீழ்த்தியிருந்தனர்.

### ரோஜாஸ் கிண்ண டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு

## 3ஆவது சுற்றுக்கு சபலென்கா முன்னேற்றம்



கனடாவில் நடைபெறும் ரோஜாஸ் கிண்ண டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர்பிரிவில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் அரினா சபலென்கா மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இரண்டாவது சுற்றில் அவர் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்ஸை 7-6 (7-4), 4-6, 6-4 என்ற செட்களில் வீழ்த்தினார்.

போட்டித்தரவரிசையில் 3 ஆம் இடத்திலிருந்த உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, 6 ஆம் இடத்திலிருந்த ருமேனியாவின் சிமோனா ஹேலப் ஆகியோர் அதிர்ச்சித் தோல்வி கண்டு இரண்டாவது சுற்றுடன் வெளியேறினா. இதில் ஸ்விடோலினாவை 3-6, 6-3, 6-2 என்ற செட்களில் வென்றார் இங்கிலாந்தின் ஜோஹன்னா கொன்டா. சிமோனாவை 2-6, 6-4, 6-4 என்ற செட்களில் வீழ்த்தினார் அமெரிக்காவின் டனியல் கொலின்ஸ்.

ஏனைய இரண்டாவது சுற்று ஆட்டங்களில் கனடாவின் ரெபெக்கா மரினோ - ஸ்பெயினின் பௌலா படோசாவையும், கிரீஸின் மரியா சக்காரி - ரஷ்யாவின் வெரோனிகா குதாமிடோவாவையும், செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா - குரோஷியாவின் டோனா வெகிச்சையும் வீழ்த்தினர்.

அமெரிக்காவின் அமான்டா அனிசிமோவா - பிரான்ஸின் ஓசேன் டோடினையும், ஸ்பெயினின் சாரா சொரைப்ஸ் டோர்மோ - ரஷ்யாவின் லுட்மிலா சாம்சனோவாவையும், டுனீசியாவின் ஆன்ஸ் ஜாபுயோ - ரஷ்யாவின் டரியா கசாட்கினாவையும் வென்றனர்.

## ரி–20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வீரர்கள், குழுவினர் எண்ணிக்கை வரையறுப்பு

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் நடைபெற இருக்கும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் ஒவ்வொரு அணியிலும் 15 வீரர்களுக்கும், 8 பயிற்சியாளர் மற்றும் நிர்வாகிகளுக்கும் மட்டுமே அனுமதி வரையறுக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தெரிவித்துள்ளது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர் ஒக்டோபர் 17 முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்தத் தொடரில் மொத்தம் 12 அணிகள் பங்கேற்கின்றன. இதில் 8 அணிகள் ஏற்கெனவே தகுதி பெற்றுவிட்டன. மேலும் 4 அணிகள் தகுதிச்சுற்றுப்போட்டிகளின் அடிப்படையில் இறுதிப் பட்டியலில் இடம்பெறும். முதலில் இந்தப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறவுள்ளன என இருந்த சூழலில் கொரோனா பாதிப்பு காரணமாக மாற்று இடத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

கொரோனாப் பரவல் சூழல் காரணமாக ஒவ்வொரு அணியும் பயோ பபிள் பாதுகாப்பு நடைமுறையைக் கடைப்பிடிக்க இருக்கிறது. இதன் காரணமாக ஐ.சி.சி. சில விதிமுறைகளை விதித்துள்ளது. அதன்படி ஒவ்வொரு அணியும் 15 வீரர்கள், 8 நிர்வாகிகளுடன் மட்டுமே வர வேண்டும் என்றும் இவர்களுக்கான அனைத்து பராமாரிப்புச் செலவுகளையும் ஐ.சி.சி. ஏற்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூடுதல் வீரர்கள் மற்றும் நிர்வாகிகள் தேவைப்பட்டால் அவர்களுக்கான செலவை ஐ.சி.சி. ஏற்காது என்றும் அவர்களுக்கான செலவை அந்தந்த அணி நிர்வாகமே ஏற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆலாலசுந்தரரை அகத்தினில் இருத்துவோம்!

– மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா–
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

இறைவன் மீது தோழமை உணர்வுடன் இப்பூவுலகில் வாழ்ந்தவர்தான் ஆலாலசுந்தரர் என்று அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனார். சுந்தரர் பூமியில் பிறந்த வரலாறு தேவ உலகுடன், எம்பெருமான் சிவனுடன் இணைந்த வரலாறாகக் கருதப்படுகிறது. இறைவனுக்குத் தேவ உலகில் அணுகு தொண்டராக இருந்தவர் - மனந்தடுமாறி பேரின்பச் சூழலை மறந்து சிற்றின்பத்துக்குள் மனதினைச் செலுத்திய காரணத்தால் பூவுலகில் பிறவி எடுக்கும் நிலைக்கு ஆளாகிறார். தேவ உலகில் இவரின் சிந்தையினைக் கலைத்த பெண்களும் பூவுலகில் பிறக்கும் நிலை ஏற்படுகிறது. சிற்றின்ப ஆசைகளுக்கு உரிய இடம் பூவுலகமே ஆனதால் சுந்தரரின் சிற்றின்ப உணர்வுகளைப் பகிர்வதற்கு - அவருக்குச் சலனத்தை ஏற்படுத்திய பெண்களே துணையாகவும் வந்து அமைகிறார்கள். அவர்களை மணந்து சுந்தரர் - தான் வந்தவேலை முடிந்தவுடன் - எங்கு முன்னர் இருந்தாரோ அங்கேயே போகிறார் என்பதுதான் ஆலாலசுந்தரரின் வரலாறாய்ப் படிக்கின்றோம்.






கதைகளை நம்பலாமா என்று எண்ணத் தோன்றுகிறது. கதைகள் எப்படி இருந்தாலும் கதைகளூடாகப் புலப்படுகின்ற கருத்துக்களைத்தான் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

காமனையே தகனம் செய்த இடத்தில் காதலுக்கு இடமே இல்லை. காதல் கொண்டால் தண்டனை அனுபவிக்க வேண்டும், தண்டனைதான் பூவுலகில் வந்து பிறப்பது. பூவுலகுதான் காதலுக்கும், சிற்றின்பத்துக்கும் ஏற்ற இடமாகும். சிற்றின்பத்தை அனுபவிக்கும் வேளை பேரின்பம் பற்றிய புரிதல் வரும். வருவதற்கு பேரின்பமயமான அந்தப் பெரும் பொருளை, பரம்பொருளைப் பற்ற வேண்டும். பற்றும் நிலையும் பல இருக்கின்றன. அதில் ஒரு நிலை நட்பு நிலையாகும். அதாவது அந்தப் பரம்பொருளை நண்பனாகக் கொண்டு அவனிடம் அடைக்கலம் புகுவதேயாகும். அதைத்தான் ஆலாலசுந்தரர் இப்பிறவியில் கையாண்டார்.

**சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம்
தாசமார்க்கம் மென்றுஞ்சங் கரனை யடையும்
நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோகம்
நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்**

- என்று சிவஞானசித்தியார் - இறைவன்மீது அடியார் கொள்ளும் பக்தி நிலை பற்றிக் காட்டுவது நோக்கத்தக்கது.

அந்தணராய் பிறந்தார். அரசனாய் வளர்ந்தார். ஆடம்பரமான வாழ்வினை வாழ்ந்தார். அப்பரைப் போலவோ, மணிவாசகரைப்போலவோ ஆலாலசுந்தரர் வாழ்ந்தவராகத் தெரியவில்லை. சுந்தரரைக் காட்டும் அத்தனை படங்களுமே அவர் அணி மணிகளுடன் ஆடம்பரமாய் அரசிளங்குமரனாகவே இருப்பதாகவே அமைந்திருக்கின்றன. அப்பரையோ மணிவாசகரையோ காட்டும் படங்கள் அத்தனையும் எதுவுமே இல்லாத துறவுக் கோலத்தில் இருப்பதாகவே அமைந்திருப்பதையும் காணமுடிகிறது. ஆனாலும் சுந்தரர் இறைவனின் நண்பனாக விளங்கி - தான் விரும்பிய அனைத்தையும் உரிமையுடன் கேட்டுப் பெற்றுக் கொண்டார் என்றும் அவரின் வரலாற்றால் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தரருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு அவர் மணக் கோலத்தில் வருகிறார். பெண்வீட்டாரும் வருகிறார்கள். அந்த ஆனந்தமான வேளையில் சிவபூஜையில் கரடி புகுந்தாற்போல - ஒரு கிழப்பிராமணர் உள்ளே வந்து விடுகிறார். புதிய புரட்சியை அவர் உருவாக்கி விடுகிறார். திருமணம் செய்ய இருக்கும் மணமகன் சுந்தரன் - தனக்கு அடிமை என்று ஒரு குண்டைப் போட்டு விடுகிறார். திருமணத்தை காண வந்தவர்கள் திகைக்கிறார்கள். மணமகன் அடிமையா? என்ன வினோதம் என்று யாவரும் முணுமுணுக்கிறார்கள். வந்த கிழப்பிராமணரோ பிடித்த பிடியாக சுந்தரன் எனக்கு அடிமை என்று அடித்துச் சொல்லி - அதற்கான எழுத்து ஆதாரத்தையும் காட்டுகிறார். சபையினரால் எதுவுமே செய்ய முடியவில்லை. மணமகன் கோலத்தில் இருந்த சுந்தரர் நீர் என்ன பித்தனா அல்லது பேயனா - மனிதனுக்கு மனிதன் அடிமையா? இது முறையற்றது" - என்று துள்ளிக் குதிக்கிறார். ஆனாலும் கிழப்பிராமணரின் பக்கம் வலுவாய் இருப்பதால் யாவரும் அவரையே பார்த்தபடி செயலற்று நிற்கிறார்கள். உஷாரான கிழப்பிராமணர் இந்த வழக்கினைத் தீர்க்க இந்த இடம் பொருத்தம் அல்ல, நான் இருக்கும் திருவெண்ணை நல்லூர்தான் பொருத்தம்" என்று கூறி சுந்தரர் பின் தொடர திருவெண்ணை நல்லூர் செல்கிறார். அங்குள்ள கோவிலுக்குள் சென்ற அந்தணர் மறைகிறார். அனைவரும் திகைக்கின்றனர். எம்பெருமான் காட்சி தருகிறார். சுந்தரர் தெளிவு பெறுகிறார். என்னை எப்படிப் பேசினாயோ அப்படியே சொற்றமிழால் சுந்தரா பாடு -உன் பாட்டே எனக்கு உகந்த அர்ச்சனை ஆகும் என்கிறார் இறைவன். சுந்தரர் வாயிலிருந்து செந்தமிழ் அருவியாய் பெருக்கெடுக்கிறது. இறைவனை எந்த வார்த்தையால் திட்டினாரோ அதே வார்த்தையையே வைத்து -

**பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன்
மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணை நல்லூர் அருட்துறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன்
எனலாமே.**

என்று மனங்கசிந்துருகிப் பாடிப்பரவி நின்றார். நாயேன் பலநாளும் உன் நினைப்பின்றி இருந்தேன். அதனால் பேயாய் திரிந்தேன், நீ பொன்னாய் , மணியாய் , வைரமாய் இருக்கின்றாய் நானோ உன்னை மறந்தே இருந்திருக்கிறேன். ஊனாய், உயிராய், உடலாய், உலகாய், வானாய், நிலனாய், கடலாய், மலையாய், நீயே இருக்கிறாய். நானோ உனை அறியாமல் இருந்து விட்டேன்.

என்று தம்மைத் தடுத்தாட்கொண்ட நிலையில் சுந்தரர் மெய்யுருகிச் செந்தமிழால் பரம்பொருளைப் பாடி நிற்கிறார். உனக்கு நான் ஏற்கனவே அடியவன் என்பதை மறந்துவிட்டேன். நீ வந்து தெளிவு படுத்தி என்னை உனது மீளா அடைமையாய் ஆக்கி - என்னை மீட்டெடுத்தாயே பரம் பொருளே என்று ஏங்குவதும், இரங்குவதும் சுந்தரர் நிலையால் வெளிப்பட்டு நிற்கிறது எனலாம். ஆண்டவனின் பரீட்சை அடியவனைக் கடைத்தேற்றியதை இங்கு கண்டு தெளிகிறோம்.

திருமணம் தொடக்கத்தில் இப்படியெல்லாம் நடந்திருக்குமா என்று கேள்விகள் கேட்டு குழம்புவதில் பயனில்லை. தனது அடியானைத் தடுத்தாட் கொள்ள நடந்த ஓர் அற்புதம் என்றுதான் இதனைக் கொள்ள வேண்டும். எங்களுக்கும் இப்படி வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களை அந்தப் படைத்தவன் செய்து காட்டியிருப்பான் என்பதை நினைத்துப் பார்த்தால் சுந்தர் கதை நன்றாகவே விளங்கும் என எண்ணுகிறேன்.

இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரர் பின்னர் சங்கிலியார், பரவையார் என்னும் பெண்களை மணமுடிக்கிறார். பூவுலகில் அனுபவிக்கும் இன்பங்களை அனுபவிக்கிறார். அவரின் விருப்பங்களுக்கு ஆண்டவனும் நண்பனாய் இருந்து அருள்பாலிக்கிறார் என்பதும் சுந்தரர் வரலாற்றால் அறிந்து கொள்ளுகின்றோம்.

சுந்தரர் பற்றிய கதைகள் பலவற்றைக் கேட்கும் நாம் – சுந்தரரின் முக்கியத்துவம் பற்றி நோக்குவதுதான் மிகவும் அவசியமாகும். அவற்றையே அகம் இருத்துவதுதான் முறையானதாகும் என்று கருதுகிறேன். சுந்தரரின் தடுத்தாட் கொண்ட கதையில் மனம் லயிக்கும் நாங்கள் சுந்தரரின் பங்களிப்பை பற்றிப் பெரிதும் பார்ப்பதே இல்லை. 'பித்தா பிறை சூடி' என்னும் பதிகத்தையும் 'மீளா அடிமை உனக்கே ஆளாய்' என்னும் பதிகத்தையும் பாடி நிற்கும் அளவிலேயே சுந்தரரை விட்டு விடுவோம். ஆனால் அதற்கு அப்பாலும் சென்று சுந்தரரை நாம் பார்க்க வேண்டும் என்பதுதான் எனது மனக் கிடக்கையாகும்.

சம்பந்தர், அப்பர் காலம் போல் சுந்தரர் காலம் அமையவில்லை. சம்பந்தருக்கும் அப்பருக்கும் புறச்சமயங்களின் எதிர்ப்பலைகள் நிறையவே இருந்தன. அவர்களின் பணிகள் அனைத்துமே - புறச்சமயங்களின் எதிர்ப்பினின்று சைவத்தை மேன்மை கொள் சைவமாக மிளிர்ந்திடச் செய்ய வேண்டும் என்னும் வகையிலே அமைந்தது எனலாம். அதற்காகவே அவர்கள் அடியவர்கள் புடைசூழ பக்தியென்னும் புரட்சியை சமூகத்தில் நடத்திக் காட்ட வேண்டியவர்களாகவே செயற்பட்டார்கள். ஆனால் சுந்தரர்காலம் அப்படி இல்லாத காரணத்தால் சுந்தரரின் பக்திப் பாடல்கள் நோக்கும், போக்கும் வித்தியாசமாய் அமைந்தன என்பது கருத்திருத்த வேண்டியது முக்கியம்.

சுந்தரர் இக இன்பங்களில் திளைத்தவராகவே இருந்திருக்கின்றார். ஆனால் எந்த நிலையிலும் இறைவனை மறவாதவராக, இறைபுகழ் பாடுபவராக இருந்திருக்கிறார் என்பதும் நோக்கத்தக்கது. துறவையோ, வெறுப்பையோ அவரது பக்திப் பனுவல்கள் காட்டுவனவாக இல்லை. இயற்கையினை மிகவும் நேசித்துப் பாடுகிறார். இரந்து நின்று பாடிப் பரிசில் பெறும் நிலையினை அவர் சாடுகிறார். தனக்கு வேண்டியவற்றை இறைவனிடம் நண்பனாய் கேட்டே பெறுகின்றவராய் சுந்தரர் இருக்கின்றார்.

**தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே**

என்று வித்தியாசமாய் சிந்தித்துப் பாடுவது சுந்தரரின் முக்கியத்துவம். அதாவது தம்மையே புகழ்ந்து இச்சையான முறையில் பேசினாலும், சார்ந்து நின்றாலும், பொருள்தர மனம் வராத பொய்மையான வாழ்வு உடைய செல்வரைப் பாடாமல், சிவனுடைய கோவிலைப் பாடுங்கள், இந்தப் பிறப்புக்கு உரிய உணவும் உடையும் பெறலாம், மறுமையில் சிவகதியும் கிடைக்கும். ஐயம் இல்லை என்பதேயாகும்.

வீரத்தின் மிடுக்கு இல்லாத செல்வனை - வீமன், அருச்சுனன் என்று புகழ்வதில் எந்தப் பயனுமில்லை; கொடுக்க மனம் இல்லாதவனைப் பாரி என்று புகழ்ந்து கூறினாலும் கொடுப்பவர் இல்லை. மூத்துத் தளர்ந்து உடல் நடுங்கும் கிழவனாகிய செல்வனை - மலை போன்ற தோள் உடையவன் என்று புகழ்ந்து வாழ்த்துவதால் பயன் இல்லை. வஞ்ச நெஞ்சனை , கொடியவனை, பாவியை, கெட்டவனை , சாது என்று கூறிப் பாடுவதால் பயன் இல்லை. ஈயாத உலோபியை வள்ளல் என்றும், கல்வி இல்லாதவனைக் கல்வி வல்லவன் என்றும், புகழ்ந்து காலம் கழிக்காதீர். எம்பெருமான் சிவனைப் பாடிப் பயன் பெறுங்கள் என்று காட்டும் பாங்கு சுந்தரரின் வித்தியாசமான சிந்தனையினை வெளிக்காட்டி நிற்கிறதல்லவா !

சம்பந்தர், அப்பர், மணிவாசகர் செய்யாத ஒரு காரியத்தைச் சுந்தரர் செய்து தமிழ்ப் பக்திப் பரப்பில் முக்கியத்துவத்தைப் பெற்று நிற்கிறார். 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' எனத்தொடங்கும் திருத்தொண்டத் தொகையினை அளித்தமை அது எனலாம். சுந்தரரின் இந்தக் கொடை மட்டும் கிடைக்காவிட்டிருந்தால் - நாங்கள் ஏற்றிப் போற்றிக் கொண்டாடும் சைவத்தின் அறுபத்து மூவரும் வந்திருக்கவே மாட்டார்கள். அவர்களின் இறை அனுபவங்களையும் நாம் அறியும் வாய்ப்பும் எமக்கு வாய்த்திருக்காது. அந்த பெருவாய்ப்பினை நாம் இன்று பெற்றிருப்பதற்கு அத்திவாரமே சுந்தரர்தான் என்பதை மனமிருத்துதல் அவசியமாகும்.

சுந்தரரின் திருத்தொண்டர் தொகை இல்லையேல் -பெரியபுராணம் வந்திருக்காது. சேக்கிழார் என்னும் தெய்வப்புலவர், செந்தமிழ் புலவர் – இறை அடியார்களை எங்கள் கண்முன்னே கொண்டுவந்து காட்டியிருக்கும் நிலையும் ஏற்பட்டிருக்காது. சிந்தாமணியில் மூழ்கிய சோழ மன்னனும் சிவனின் திருவருளை அறிந்திருக்க மாட்டான்.

பெரியபுராணம் என்னும் சைவத்தமிழ் காப்பியம் இன்று சைவத்துக்கே பெரும் பொக்கிஷமாய் திகழ்கிறது என்றால் அதற்கு மூலகாரணமே ஆலாலசுந்தரர்தான் என்பதை மறுத்துரைத்துவிட முடியாது. ஆலயங்கள் தோறும் அடியார்களின் திருவுருவச்சிலைகள் வைக்கப்பட்டு, உரிய காலங்களில் குருபூஜை செய்யப் பட்டு, திருவீதி உலா வருவதற்கும் ஆலாலசுந்தரப் பெருமானே அடித்தளம் இட்டார் என்பது பெரு முக்கியதுவத்தை உணர்த்துகிறதல்லவா !

**தேன்படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டைத்
தினந்தோறும்
நான்படிக்கும் போதுஎன்னை நான்அறியேன் நாஒன்றே
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்கு
உயிரும்
தான்படிக்கும் அனுபங்காண் தனிக்கருணைப்
பெருந்தகையே**

**" வாழி திருநாவலூர் வந்தொண்டர் பதம் போற்றி"**

# காணாமல் போனோர் பலர் வெளிநாட்டில்!

## தினேஷ் குணவர்தனவின் குதர்க்கம்



இலங்கையில் போரின் போது காணாமல்போனார்கள் எனக் கூறப்படுவோரில் பலர் வேறு பெயர்களில் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் என்று தகவல்கள் கிடைத்துள்ளன என வெளி விவகார அமைச்சர் தினேஷ் குண வர்தன தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட போரின்போது அவர்கள் முறையற்ற வழிகளின் ஊடாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என்று 'த ஐலண்ட்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

காணாமல்போனார்கள் எனக் கூறப்படும் நூற்றுக்கணக்கான நபர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றமையை நிரூபிக்க எம்மிடம் அறிக்கைகள் உள்ளன. அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் நாடுகளிடம் இருந்து நாம் தகவல்களைக் கோரியுள்ளோம்.

எனினும், சில நாடுகள் அந்தத் தகவல்களை வழங்க மறுத்துள்ளன. இலங்கையுடன் போருடன் தொடர்புடைய பரஸ்பர ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட நாடுகள் மட்டுமே அந்த விவரங்களை சட்டபூர்வமாக வழங்க முடியும். காணாமல் போனவர்கள் தொடர்பில் சர்வதேச அரங்கில் தொடர்ந்தும் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது.

ஆனால், காணாமல் போனவர்கள் இப்போது அவ்வாறு கேள்வி எழுப்பும் அமைப்புகளுடன் தொடர்புடைய நாடுகளிலேயே வாழ்கின்றனர்.

எங்களுக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை இல்லை என்பதைசர்வதேசஅமைப்புகளை நம்ப வைக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எவ்வாறாயினும் காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டுச் சான்றிதழ்களை வழங்க அரசு ஏற்கனவே முன்வந்துள்ளது. ஆனால், உறவினர்கள் அதனை மறுத்துள்ளனர்.

அத்தோடு தமது உறவுகள் எங்கே, அவர்கள் இறந்துவிட்டார்களா? அல்லது உயிருடன் இருக்கிறார்களா? என்று விசாரிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

காணாமல்போனவர்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை. அதேவேளை, அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று அரசு கருதவும் முடியாது. எனவே, அவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களைக் கொடுக்க முடியாது. 1988 ஆம் ஆண்டில் காணாமல்போன நபர்கள் சிலர், சமீப ஆண்டுகளில் வீடு திரும்பினர் எனக் கூறப்படுகின்றது. நாங்கள் அவர்களின் இறப்புச் சான்றிதழ்களை வழங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்? என்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

# இரத்ததானம் செய்வோருக்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டன

கொரோனா அறிகுறிகளைக் கொண்டவர்கள், கொரோனாத் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் மற்றும் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடுகளில் இருந்து வருகைதந்தவர்கள் இரத்த தானம் செய்ய வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பின் போது தேசிய இரத்த மாற்று சேவைகளின் பணிப்பாளரான வைத்தியர் லக்ஷ்மன் எதிரிசிங்க இது தொடர்பில் தெரிவிக்கையில் –

கொரோனா வைரஸ் இரத்தத்தால் அல்லது அதன் கூறுகளால் பரவுகிறது என்பது குறித்து அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

எனினும் தொற்றாளர்களிடமிருந்து வைத்தியசாலை ஊழியர்களுக்கு பரவுவதைத் தடுக்கும் வகையிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரத்தத்தை சேகரிக்கும் போது ஐந்து தொற்று நோய்களை அடையாளம் காணும் சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த ஏழு நாள்களுக்குள் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்ற நபர்களிடமிருந்து இரத்தம் சேகரிக்கப்படாது.

ஏனெனில் இந்தச் சோதனை முடிவுகளை தடுப்பூசி பாதிக்கலாம் என அவர் தெரிவித்தார். தற்போதைய சூழ்நிலையில் குருதியைச் சேகரிப்பதில் நாம் சிக்கல்களை எதிர்நோக்குகின்றோம்.

ஆகையால் அனைவரும் இரத்த தானம் செய்ய முன்வருமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். தேசிய இரத்த மாற்று சேவை சுகாதார சேவைகளுக்கு இடையூறு இல்லாமல் சேவைகளை வழங்கியுள்ளது. பொது இரத்த தானம் செய்வதற்காக 24 மணிநேர ஹொட்லைன் இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதன் ஊடாக பொது மக்கள் அருகிலுள்ள இரத்த தான மையங்களில் இரத்த தானம் செய்ய முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 011-5332153 மற்றும் 011-5332154 எனும் இலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுகாதார வழிகாட்டல்களை சட்டமாக்க முடிவு - பவித்ரா

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்படும் சில சுகாதார வழிகாட்டல்களை சட்டமாக்குவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.



# சிவப்பிராப்தி நிலைக்கு இறை பிரார்த்தனை

சைவசமயத்தைதென்னகத்தில் நிலைநிறுத்தவும், திருநீற்றின் ஒளி எங்கும்பரவவும் மதுரையில் திருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்றது மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்.

இந்த ஆதீனத்தின் 292 ஆவது மகாசந்நிதானமாக விளங்கிய அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சமயப்பணிக்கு அப்பால் ஆன்மீகப்பணி, அரசியல் பணி, சமுதாயப்பணி, சமயநல்லிணக்கம் என பலவகையிலும் உழைத்ததுடன் குரல் கொடுத்தார்கள். எமது சமயத்துக்கு தொய்வு ஏற்பட்டுள்ளது போல ஆதீனத்தின் பரிபூரணமான செய்தி கிடைத்தது. ஆங்கில அறிவுடன் மாற்றுசமயநூல்களின் அறிவு அவரிடம் சிறப்பாக இருந்தமை கண்டு வியந்துள்ளோம்.

மேலும் இலங்கையில் சைவமும் தமிழும் தழைத்தோங்க தொண்டாற்றியவரும், சிவாகமசேகரம், சிவலிங்கபிரதிஷ்டாவிதி உட்பட்ட பல சமஸ்கிருத, தமிழ் நூல்கள் இயற்றி வெளியிட்டுள்ள, எமது யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவாகமஞானபானு சிவஸ்ரீ ச.குமாரசுவாமி குருக்களுக்கு 'சிவாகமஞானபானு' எனும் சிறப்புப்பட்டத்தை பராபவ வருடம் வைகாசி மாதம் 22ஆம் நாள் 04.06.1966 இல் ஆதீன ஆதி குருமூர்த்தி திருஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குருபூஜை தினத்தில் வழங்கியமையை எண்ணிப்பார்க்கிறோம்.

மகாசந்நிதானம் அவர்கள் சிவப்பிராப்தி நிலை பெற்றிட அன்பே உருவான பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனையினை நாம் இலங்கையில் இருந்து இந்துக்குருமார் அமைப்பின் சார்பில் செய்கின்றோம். என அதன் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் தெரிவித்துள்ளார்.

# ஆட்பதிவு திணைக்கள செயற்பாடுகள் நிறுத்தம்

ஆட்பதிவு திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளும் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர்கள் பலருக்குகொரோனாதொற்றுஉறுதிசெய்யப்பட்டதை அடுத்தே இந்த முடிவு எட்டப்பட்டதாக அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கு அஞ்சல் முகவரிகள் மூலம் அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில்பொதுப்பரீட்சை,நேர்முகப்பரீட்சை மற்றும் கடவுச்சீட்டு போன்ற அவசர தேவைகளுக்கு அடையாள அட்டையை பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் 8 ஏக்கர் காடு அழிக்கப்பட்டு நில ஆக்கிரமிப்பு!

மட்டக்களப்பு- காராமுனை பகுதியிலுள்ள வனத்தில் மரங்களை வெட்டி தீயிட்டு, சுமார் 8 ஏக்கர் பகுதி அழிக்கப்பட்டு, நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வாகனேரிவனப்பகுதியிலுள்ள காரமுனை கிராமத்துக்கு முன்னால் உள்ள இந்தக் காட்டை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிலர் ஊடுருவி, அங்கிருக்கும் பழைமைவாய்ந்த மரங்களை வெட்டி, விழ்த்தி தீயிட்டு எரித்துள்ளனர்.

இதனால் சுமார் 8 ஏக்கர் காடு அழிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை உரிய அதிகாரிகள் முன்னெடுக்கவேண்டுமெனபொதுமக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.08.2021இல் வெளியிடப்பெற்றது.